# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 53வது கூட்டறிக்கை 2022.07.05

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 53வது அமர்வு 2022.07.05 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம்.நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 18. திருமதி.கே.குலமணி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 19. ஜனாப்.ஏ.எச்.அன்வர் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி.ஏ.பீ.எப்.ஆக்கிலா | தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 53வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள் சுகயீனம் காரணமாக சபை அமர்வுக்கு சமூகமளிக்க முடியாது என்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார். அவருக்கு விடுமுறை வழங்குவதற்கான அனுமதி.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.முஹம்மட் சஹீல் |

இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். திருத்தங்கள் இருந்தால் கூறலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

கூட்டறிக்கை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களே நமது வாழ்நாளில் அனுபவிக்காத காலகட்டத்தை இன்று நாம் அனுபவிக்கின்றோம். எல்லாம் இருந்தும் அதாவது சகல சொத்துக்கள் இருந்தும் எமக்கு விரும்பியவாறு செயல்பட முடியாத ஒரு நிலைக்கு நாம் முகம் கொடுத்துள்ளோம். வீட்டிற்கு நான்கு மோட்டார் வண்டிகள் இருந்தும் நடந்து செல்ல வேண்டிய ஒரு நிலையை எதிர் நோக்கிச் செல்கின்றோம். இதில் நமது சபையானது பொது மக்களுக்கு சேவையாற்ற வேண்டிய ஒரு கட்டாய கடமை இருப்பதனால், நாம் முன்னெச்சரிக்கையாக நமது நாளாந்த வேலைக்குத் தேவையான எரிபொருளை சேமித்து வைத்திருந்ததால் இவ்வளவு காலமும் மக்களுக்கு உணராத வகையில் நாளாந்தம் நமது கடமைகளை செய்து வந்திருக்கின்றோம். ஆனால் இன்று இந்த பரஸ்பர முரண்பாடான செய்திகளை கேட்கும் போதும் இதை எவ்வளவு நாட்களுக்கு நாம் தொடரலாம் என்ற ஒரு கேள்வி எழுகின்றது. ஏனென்றால் Ceypetco எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் தவிர, சம்மாந்துறையில் IOC எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இல்லை. மற்றைய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எதிலும் எரிபொருள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

நாம் எவ்வாறு இந்த திண்மக்கழிவகற்றல் செயற்பாட்டை தொடர்ந்து செய்வது. ஐந்து நாட்களும் தொடர்ச்சியாக வேலை செய்கின்றோம். ஆறாவது நாளும் அரை நாள் வேலை செய்கின்றோம். இதை மக்கள் உணரவில்லை. மக்களின் குப்பைகள் குறையவும் இல்லை. மக்கள் எம்மை குறை கூறுவதும் குறையவும் இல்லை. இதை மக்களுக்கு உணர்த்த வேண்டிய காலம் ஒன்று வந்துள்ளது. சில வேளைகளில் ஜும்ஆ வில் இது சம்பந்தமதன அறிவித்தல்கள் கொடுக்கப்படலாம். திண்மக்கழிவகற்றல் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வரலாமென்று. மக்களும் இதில் பங்களிக்க வேண்டும். மூன்று நாள் செயற்பாட்டை ஒரு நாளாக மற்றி எவ்வாறு அதனை செயற்படுத்துவது என்பதில் சிக்கல்கள் உள்ளது. இவற்றை எவ்வாறு குறைப்பது.

Face Book, whatsapp போன்றவற்றில் விமர்சிப்பது கௌரவ தவிசாளரைத்தான். அதை என்னுடன் இரக்கமுள்ள கௌரவ உறுப்பினர்கள் எனக்கு அனுப்புவார்கள். வாசித்துப் பாருங்களென்று. நீங்கள் அதற்கு பதில் அனுப்பிவிட்டு அந்தப் பதிலையும் எனக்கு அனுப்பினால் சிறப்பாக அமையும். நான் சபைக்கு வருவதற்கு முன்பு கௌரவ உறுப்பினர்கள் எல்லோரும் சிறைக் கைதி போல் என்னை வளைத்து எங்களுக்கு நீங்கள் எரிபொருள் எடுத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இப்போது நான் நிந்தவூர் IOC எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளருடன் பேசினேன். எனக்கு என்றில்லாமல் சம்மாந்துறைப் பிரதேசபைக்கு தரலாமா என்று கோரியுள்ளேன். அவர் சிறிது நேரத்தின்பின் கூறுவதாகக் கூறியுள்ளார்.

இந்த எரிபொருள் விடயத்தில் இளைஞர் அதாவது ஆசிரியர் ஒருவர் ஒரு திட்டத்தை வகுத்திருந்தார். எரிபொருள் தொடர்பான முன் திட்டம் என்று. அவருடைய முன்மொழிவு என்னவென்றால் ஒவ்வொரு மஹல்லாவாகச் சென்று அந்த மஹல்லாவில் உள்ள வாகன உரிமையாளர்களை ஆவனங்களுடன் அவர்களை வரவழைத்து அவர்களைப் பதிவு செய்தல். அதன் பிறகு அந்தந்த தொழிலுக்கு ஏற்ற வகையில் ஒரு கூப்பன் ஒன்றை வழங்குதல். முதல் சுற்றில் எரிபொருள் வருகின்றது என்றால் அந்தக் கூப்பனைக் கொண்டு முதல் சுற்றுக்கான எரிபொருளை பெற்றுக் கொள்ளுதல். அவ்வாறு பெற்றுக் கொண்டதும் அந்தக் கூப்பனில் பஞ்ச் பன்னப்படும். அதன் பின் வேறு எந்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு செல்ல முடியாது. அதேபோல் இரண்டாவது தடவை எரிபொருள் நிரப்பப்படுகின்றது என்றால் இரண்டாவது தடவை அந்தக் கூப்பனைக் கொண்டு எரிபொருள்

நிரப்பினால் அதில் மீண்டும் பஞ்ச் பண்ணப்படும் பிறகு வேறு எந்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கும் செல்ல முடியாது. இதனால் அனைவருக்கும் எரிபொருள் கிடைப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும். இவ்வாறான திட்டம் ஒன்று என்னிடம் முன்வைக்கப்பட்டது. இது கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்களின் ஏற்பாட்டில் தான் அவர் என்னை வந்து சந்தித்து இந்த முன்மொழிவை முன்வைத்திருந்தார்.

இத்திட்டத்தை நான் GA அவர்களிடம் கொண்டு சென்ற போது, அவர் அதற்கு எமக்கும் இதற்கும் தொடர்பு இல்லை இதனை அரசாங்கம் இராணுவத்திடம் ஒப்படைத்து விட்டது என்று கூறினார். நேற்று தவிசாளர் என்ற ரீதியில் பிரிகேட் கொமான்டர், எஸ்.எஸ்.பி, ரீ.ஐ.ஜி, ஜீ.ஏ எல்லோரிடமும் வேண்டிக்கொண்டேன் இன்று அவசரமாக ஒரு கூட்டத்தை கூட்டுமாறு. ஒவ்வொரு நிர்வாக எல்லைக்குள்ளும் எவ்வாறு இதனை செயற்படுத்துவது என்பது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுமாறு கூறி இருக்கின்றேன். அவ்வாறான ஒரு ஏற்பாடு செய்யாவிட்டால் எரிபொருள் பவுசர் முதல் முதலாக வரும் போது பாரிய பிரச்சினைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது. அடுத்த பிரச்சினை வயல்கள் வெட்டுவதற்கான காலம் அடுத்த கிழமைகளில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. விவாசாயிகள் வயலுக்கு சென்று வருதல், அரச ஊழியர்கள் வேலைக்கு சென்றுவருதல், அத்தியவசிய சேவைக்குரிய உத்தியோகத்தர்கள், பொது மக்கள் என்று இந்த அனைவரையும் எவ்வாறு சமாளிப்பது என்பது ஒரு பாரிய பிரச்சினையாக உள்ளது. பொதுமக்கள் தாங்கள் சென்று வைத்தியம் பெறுகின்ற வைத்தியர் முன்னுரிமை பெறுவதற்கும் மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். அந்த நிலையில் இருக்கின்றோம். பணம் இருந்தும் எதுவும் செய்ய முடியாத ஒரு சூழல் காணப்படுகின்றது.

ஆறு மாதங்களுக்கு முன்பே சபையில் தீர்மானம் ஒன்றை மேற்கொண்டு மொத்தமாக டீசல் எடுத்து வைத்திருந்தோம். இந்த டீசல் இன்றைய விலையில் இல்லை. ரூபா. 121.00 வுக்கு அன்று நாம் டீசல் எடுத்து வைத்திருந்தோம். அதனால் தான் எமது செயற்பாடுகளை இவ்வளவு காலமும் மேற்கொண்டு வருகின்றோம். ஒவ்வொரு பரல் முடிவடைந்தததும் நாம் அதனை நிரப்பி வைக்க வேண்டும். இல்லாவிட்டால் எமக்கு பாரிய பிரச்சினை ஏற்படும்.

சென்ற சபையிலும் நான் இதைப்பற்றி பேசியிருந்தேன் வறுமை என்கின்ற ஒரு விடயம் பற்றி. மக்கள் மத்தியில் இன்று உணவைப் பெற்றுக் கொள்ளக்கூட வசதி இல்லாத பல குடும்பங்கள் இருக்கின்றது. இதில் சபையும் நம்பிக்கையாளர் சபையும் ஈடுபடவேண்டும் என்ற ஒரு எண்ணம் இருக்கின்ற சந்தர்ப்பத்தில், இந்த ''பசித்தவருக்கு உணவளிப்போம்'' என்ற திட்டத்தின் கீழ் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். அதற்கு நானும் எனது முழு அனுசரணையும் வழங்கியுள்ளேன். இந்த ஊரில் சென்ற கிழமை சராசரியாக 290 சாப்பாட்டுப் பார்சல்கள் வினியோகிக்கப்பட்டுள்ளது. அதில் எந்தெந்த மஹல்லாவுக்கு எவ்வளவு வழங்கப்படுகின்றது என்று முழு விபரமும் அந்த குழுவில் போடப்படுகின்றது.

இதனை இந்தத் தனி அமைப்பினால் தொடர்ச்சியாக செய்ய முடியாது. அங்கு மக்களுக்கான உணவு பார்சல்கள் வருகின்ற பொழுது அதனை மக்களுக்கு கொண்டு சென்று வழங்குவதில் சிரமங்கள் ஏற்படுகின்றது. அதாவது அதனை கொண்டு செல்வதற்கான எரிபொருள் இல்லாமல் உள்ளது. இந்த செயலை ஒவ்வொரு மஹல்லா ரீதியாக பாரம் கொடுக்கின்ற பொழுது அந்த உணவுகளை மக்களுக்கு வழங்குவதில் ஏற்படுகின்ற சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும். இது சம்பந்தமாக நம்பிக்கையாளர் சபையிடம் நேற்று கலந்துரையாடப்பட்டது. பொதுவான விடயம் என்னவென்றால் நிர்வாக ரீதியாக செய்யக்கூடிய உதவிகளை பிரதேச சபை ஆரம்பத்தில் செய்யும். மற்றையவைகளை பள்ளிவாசலும் பொறுப்பெடுத்து அந்தந்த மஹல்லா ரீதியாக உதவி செய்யும்.

இன்னும் ஒரு கட்டம் வரும் இவர்களினால் இதனை செய்ய முடியாத நிலை ஒன்று உருவாகும். அந்த சந்தர்ப்பத்தில் நமக்கு ஒரு பொறுப்பு வரும் நம்பிக்கையாளர் சபையும் பிரதேச சபையும் இணைந்து இந்த விடயத்தை மஹல்லா ரீதியில் கையாள்வதற்கான தேவை வரும்.கொடுப்பவர்கள் தொடர்ச்சியாக கொடுத்துக் கொண்டிருப்பார்கள். வெளிநாடுகளில் இருந்தும் இதற்கான உதவிகள் வழங்கப்பட்டும். பொதுவாக ஒரு அமைப்பிற்கு தொடர்ச்சியாக இதனை மேற்கொள்வது கஷ்டமாக

இருக்கும். அந்த சந்தர்பத்தில் எமது சபை நிதியிலிருந்து அதற்குப் பங்களிப்புச் செய்வதற்கு எமது சபையின் அனுசரணை தேவைப்படுகின்றது. ஏதாவது கருத்துக்கள் இருந்தால் தெரிவிக்கவும். ஆனால் இவ்வாறு இணங்காண்பதில் அரசியல் ரீதியாக நோக்காமல் நீங்கள் நியாயப்படுத்தக் கூடிய குடும்பங்கள் இருக்குமானால் அந்த தகவல்களை பள்ளி நிர்வாகத்திற்கு வழங்குங்கள். அது பள்ளிவாசல் நிர்வாகம் மூலம் நம்பிக்கையாளர் சபையிடம் சென்று அந்த அமைப்புக்கு செல்லும்போது பொறுப்புக்கூறல் ஒன்று காணப்படும். இதில் அவர் தமது குடும்பம் சார்பானவர்களுககு வழங்கிவிட்டார் என்ற குற்றச்சாட்டுகள் குறைவடையும். இது ஒரு முக்கியமான விடயம். இந்த விடயத்தில் அனைவரும் சபை உறுப்பினர்கள் என்ற ரீதியில் நீங்களும் பங்காளிகளாக மாற்றுவதற்கு அந்த பங்களிப்பை செய்வீர்கள் என்ற ஒரு நம்பிக்கை என்னிடம் உள்ளது.

**கௌரவ உறுப்பனர் எஸ்.எம்.எம்.முஸ்தபா அவர்கள்**

கௌரவ தவிசாளர் அவர்களே இந்த பசித்தோருக்கு உணவளித்தல் என்ற இந்த முறைமை இன்று இளைஞர்கள் ஒன்றுகூடி ஆரம்பித்திருப்பது உண்மையிலேயே மிகவும் பாராட்டத்தக்க ஒரு விடயம். கடந்த ஒரு வார காலமாக மிகவும் நேர்த்தியான முறையில் மிகவும் பயனுள்ள ஒரு விடயமாக, ஒருவேலை அமைப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அதற்கு எமது சபை சார்பில் எமது ஆசிர்வாதத்தையும் அங்கீகாரங்களையும் வழங்குவதோடு, இந்த முறைமையானது ஆரம்பத்தில் குருநாகல் மாவட்டத்தில் ஒரு  சிறிய கிராமத்தில் பள்ளிவாசலில் ஆரம்பிக்கப்பட்ட முறைமை. இந்த செயற்பாடுகள் மஹல்லா ரீதியில் ஆரம்பிக்கப்பட்டது. மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள கிராமத்திலேயே இது ஆரம்பிக்கப்பட்டது. பள்ளிவாசல் நிர்வாகத்தின் ஊடாகவே ஆரம்பிக்கப்பட்டு இரண்டு பிரிவுகளாக இது செயல்படுத்தப்பட்டது. முடியுமாணவர்கள் கொண்டு வந்து வைப்பது. தேவை உள்ளவர்கள் தேவைப்படுவதை எடுத்துச் செல்லுதல்.

இவ்வாறுதான் இது ஆரம்பிக்கப்பட்டது. இறுதியில் தேவையிருந்து எடுத்துச் சென்றவர்கள் சென்றவர்கள் தாங்களும் பங்களிப்பு செய்ய முடியும் என்று கொண்டுவந்து வைக்கும் அளவுக்கு வந்தது. அந்த மனநிலையை நாம் வளர்க்க வேண்டும். கௌரவ தவிசாளர் அவர்கள் கூறியது போன்று எமது ஊர் பரந்துபட்ட ஊர். இந்த பிள்ளைகள் இந்த சாப்பாடுகளை பகிர்வதில் எரிபொருள் தட்டுப்பாடு காணப்படுகின்றது. அவர்கள் ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திடமும் சென்று இதற்கான உதவியை கோரிய போது எவரும் முன்வரவில்லை. இருந்தபோதும் கபூர் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் 10 லீட்டர் எரிபொருளை வழங்கி அவர்களுக்கு உதவி செய்துள்ளார். அதனை கொண்டுதான் இன்று அவர்கள் இந்த வேலையை நிறைவு செய்து கொண்டு இருக்கின்றார்கள். மஹல்லா ரீதியாக இதனை செயற்படுகின்ற போது இது ஒரு சாத்தியமான விடயமாக அமையும் என்பது எனது கருத்தாக உள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

ஆரம்பத்தில் நாம் முன்வைத்த கருத்தும் இதுதான். ஆனால் அதற்கிடையில் இந்த அமைப்பு ஆரம்பித்து விட்டது. ஆகவே நாம் அதற்கு தடையாக அமைந்து விடக்கூடாது அவர்கள் இந்த விடயத்தை சிறப்பான முறையில் செயல்படுத்திற் கொண்டு வருகின்றார்கள். ஒருவரிடமிருந்து ஒரு சாப்பாட்டுப் பொதி வருகின்ற போது, அவருடைய பெயர் இந்தப் பட்டியலில் எத்தனையாவது இடத்தில் உள்ளது என்று பார்த்து அந்த இலக்கத்தை அந்த சாப்பாட்டு பார்சல் மீது இடுகின்றார்கள். ஏதாவது பிரச்சினை வந்தால் அந்த பார்சலில் உள்ள இலக்கத்தை பார்த்து அது எங்கிருந்து வந்தது என்று கண்டுபிடிக்கும் அளவுக்கு அவர்கள் இதனை செயற்படுத்துகின்றார்கள். இந்த இளைஞர்கள் கோபப்பட்டு கதைத்தார்கள் என்னவென்றால், ஒவ்வொரு மஹல்லாவிடமும் தங்களது மஹல்லாவில் கஷ்டப்படுகிற குடும்பங்களின் விபரங்களை கேட்ட போதும் அவர்கள் அந்த விபரங்கள் தங்களிடம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். எத்தனை குடும்பங்கள் தேவையுள்ள குடும்பங்கள் என்று கேட்கின்ற போது அவர்கள் அதனை இணங்காண்பதற்குத் தயங்குகிறார்கள். இதனை நாம் ஊக்குவிக்க வேண்டும் அந்தந்த மஹல்லாவில் யார் தேவையுடையவர்கள் என்று தகவல்கள் இருக்கவேண்டும்.

இவர்கள் A,B,C என்று மூன்று வகையாக பிரித்து எடுத்துள்ளார்கள். A பிரிவில் உள்ளவர்கள் கட்டாயம் கொடுக்க வேண்டியவர்கள். பார்சல் குறைவாக வருகின்றபோது A பிரிவில்

உள்ளவர்களுக்கு வழங்கி விட்டு மீதியை அடுத்த பிரிவில் உள்ளவர்களுக்கு வழங்குகின்றார்கள். இவ்வாறு சிறந்த முறையில் அவர்களது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.
பெருநாள் தினத்தன்று அதனை அடுத்து மறுநாளும் அவர்களால் இந்த சாப்பாட்டு பொதிகளை வழங்குவதில் சிரமங்கள் காணப்படுவதாக கூறுகின்றார்கள். இதனால் இந்த அமைப்பு ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளது 2000.00 ரூபாய் பெறுமதியான பொதிகளை வழங்கி பங்களிப்பு செய்யுமாறு கோரி உள்ளார்கள். இதனை அந்த வறிய குடும்பங்களுக்கு கொடுத்து உதவுவதற்காக. இதை நானும் வெளிநாட்டில் உள்ளவர்களிடமும் இதற்கான கோரிக்கைகளை கொடுத்துள்ளேன். நீங்களும் இதில் உங்களது பங்களிப்புகளை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**தீர்மானம் - 04/53/01**

சென்ற மாதம் 2022.06.01 தொடக்கம் 2022.06.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எம்.முஸ்தபா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/53/02**

பசித்தோருக்கு உணவு வழங்கும் வேலைத்திட்டத்தினை எமதூரில் பொது சமூக சேவைகள் அமைப்பு கடந்த 25.06.2022 ஆந் திகதி முதல் ''பசித்தோருக்கு உணவளிப்போம்'' எனும் தொனிப் பொருளில் சிறப்பாக செய்து வருகின்றது. இத் திட்டத்தில் எமது சபையும் இணைந்து நிருவாக ரீதியாக வாகன மற்றும் ஒலிபெருக்கி வசதிகளை வழங்கி உதவுவதுடன், எதிர்காலத்தில் நம்பிக்கையாளர் சபை மற்றும் கோயில் தர்மகத்தா சபைகளுடன் இணைந்து ஏழைகளுக்கு உதவும் இத்திட்டத்தில் நேரடியாக பங்குபற்றி செயற்படுத்துவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/53/03**

வாகனம் நிறுத்தும் பழைய அலுவலகத்திலுள்ள விரல் அடையாள இயந்திரம் பழுதடைந்துள்ளது. ஏலவே பிரதான அலுவலகத்தில் பாவிக்கப்பட்டது மிகப் பழமையானது. தற்போது புதிதாக Face / Finger Machine ஒன்றை கொள்வனவு செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/53/04**

LI- 3269 கொம்பெக்டர் இயந்திரத்தின் கீழ் தட்டு துருப்பிடித்துள்ளது. அதனை திருத்தம் செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/53/05**

RV- 1244 இழுவைப் பெட்டி தட்டு, கதவு, தூண்கள் திருத்தம் செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/53/06**
46 – 4183 இழுவைப் பெட்டிக்கு டயர்கள் மாற்றம் செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**
இன்றைய நாட்டு நிலவரத்தில் ஏறத்தாள 90 நாட்களுக்கு மேலாக இந்த அரசுக்கும், ஆட்சியாளருக்கும் எதிராக பொது மக்களினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த போராட்டம் இன்று 93, 94 நாட்களைத் தாண்டிச் செல்கின்றது. இதில் முதற்கட்டத்தில் நாட்டின் ஜனாதிபதி பதவி விலக வேண்டும், அரசு இராஜினாமா செய்ய வேண்டுமென்று ஆரம்பித்த கோசம், இடையில் கௌரவ ரணில் விக்கிரமசிங்க பிரதமராக்கப்பட்டதும் சற்று தணிந்து மீண்டும் மக்கள் இந்த ஜனாதிபதி மட்டுமல்ல நமது நாட்டின் பிரதம மந்திரியும் பதவி விலக வேண்டும், தேர்தல் நடத்தப்பட வேண்டும், அல்லாவிட்டால் கூட்டு அரசாங்கம் சகல கட்சிகளையும் உள்வாங்கிய அரசாங்கமொன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற கோஷம் வலு அடைந்துள்ளது. இந்தக் கிழமையில் பல மாற்றங்கள் ஏற்படலாம் என்ற நிலையில், மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும் நாம் இதை எப்படி நமது நிலையை தெரிவிப்பது என்ற ஒரு விடையம் உள்ளது. அரசியலுக்கு அப்பால் இன்று இந்த சபையில் இருக்கும் கௌரவ உறுப்பினர் ஒருவரைத் தவிர மற்றயவர்கள் எல்லோரும் மாற்றுக் கட்சி கருத்துடையவர்கள். ஜனாதிபதி பதவி விலக வேண்டும், பிரதமர் பதவி விலக வேண்டும் என்று பிரதேச சபை என்ற ரீதியில் நாம் தீர்வு எடுக்க முடியாது என்பது எனது நிலை.

ஆனால் மக்களின் விருப்புகளை மதித்து, சர்வமத தலைவர்களின் ஒரு வேண்டுகோளை உள்வாங்கி இந்த அரசு மக்களின் கட்டளைக்கு அடிபணிய வேண்டும், தவறும் பட்சத்தில் இந்த நாட்டில் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு பொறுப்புக்கூற வேண்டும். என்ற ரீதியில் ஒரு அறிக்கையை விடலாமா என்ற ஒரு கேள்வியை நான் உங்கள் மத்தியில் விடுகின்றேன். உங்களின் கருத்துக்களை வைத்து நாம் ஒரு முடிவை எடுத்து அதை செயற்படுத்தலாம் என நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெவ்வை அவர்கள்**
எங்களது கௌரவ தவிசாளரின் பொறுப்புணர்ச்சியான கருத்து அல்லது வேண்டுகோளை நன்றாக செவிமடுத்திருக்கின்றேன். ஆனால் கௌரவ தவிசாளர் அவர்களின் பேச்சில் ஒருவரைத் தவிர என்று சொன்னீர்கள் அது ஒருவரா? இருவரா? ஒருவர் என்றால் யார்? என்னைப் பொருத்தமட்டில் கௌரவ உறுப்பினர் அஸ்வர் அவர்களும் நானும் தான் தேசிய அரசியலில் அரசின் கட்சிகளில் இருக்கின்றோம். கௌரவ தவிசாளர் அவர்களே இன்று நாங்கள் ஐந்தாவது வருடத்தில் இருக்கின்றோம், நான்கு வருடங்கள் சந்தோஷமாக கடந்திருக்கின்றோம். எந்தவிதமான முரண்பாடுகள் இருந்தாலும் அரசியல் ரீதியான கருத்துக்களை நாங்கள் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் 69 இலட்சம் மக்கள் அதிமேதகு ஜனாதிபதி அவர்களை தெரிவு கண்டு ஜனாதிபதியாக்கி இருந்தார்கள். இடைநடுவில் ஏற்பட்ட அரசாங்கத்தின் இஸ்த்திரமற்ற பொருளாதாரக் கொள்கைகள், ஒரு நாட்டில் இருக்கின்ற இன ரீதியான சில பக்கச்சார்பான செயற்பாடுகள் காரணமாகவும், அரசாங்கத்துக்குள் ஏற்பட்ட பிளவுகளினால் புதிய பிரதமர் ஒருவரை நியமிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.
நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை பிழையாக இருக்கின்ற காரணத்தினால நிர்வாக கட்டமைப்புக்கள் பிழையாக சென்று கொண்டிருந்த படியினால் பாராளுமன்றத்தில் ஏனைய கட்சிக்காரர்களின் கருத்துகளுக்கிணங்க இங்கு தேசிய அரசாங்கமொன்று அமைக்கப்பட வேண்டும் என்பது தற்போதுள்ள நாட்டு மக்களின் வேண்டுகோளாக இருக்கின்றது.

ஆனால் அதற்கு முன்பதாக இந்த ஜனாதிபதியின் செயற்பாடு பிழை என்பதை நாம் எல்லோரும் உணர்ந்து இருந்தோம். ஜனாதிபதியை குற்றம் கூறியிருந்தோம். இதே நேரத்தில் அரசியல் அமைப்புகள் தான் இந்த நாட்டின் அரசியலை இந்த நாட்டை நிர்வகிக்கின்றது.

அந்த அடிப்படையில் சட்டத்தை ஏற்றுகின்ற அல்லது தடுக்கின்ற உரிமை அல்லது ஒரு அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு போவதும் அல்லது பிரதமருக்கோ ஜனாதிபதிக்கோ எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு போவதும் அந்த 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையில் உள்ளது. அரசாங்கம் 20வது யாப்பைக் கொண்டு வந்த நேரத்தில் எல்லோரும் மிகவும் மன உளைச்சலுக்கு, முக்கியமாக சிறுபான்மை மக்கள் அதிலும் முஸ்லிம்கள், கொரோனாவுடன் சம்பந்தப்பட்ட உடல் எரிப்பு சம்பந்தமாக ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாக மிகவும் வேதனையோடு இருந்த காலம். தொடர்ந்தும் சிறுபான்மை மக்கள் நஷ்டப்பட்டு இருந்த சூழலில் 20ஆவது சட்டம் இந்த அரசாங்கத்தினால் ஜனாதிபதி ஊடாக மேற்கொண்டது.

அது பிழையென்று பெரும்பான்மை மக்கள் விளங்கியிருந்த காலத்தில் குறிக்கப்பட்ட ஒரு சில சிறுபான்மைக் கட்சிகளின் தான் தோன்றித்தனமான உறுப்பினர்களின் செயல்பாட்டினால் அந்த 20வது சட்டத்தை 100% பெரும்பான்மையோடு வெற்றியீட்டிக் கொடுத்திருந்தது. அந்த வெற்றிதான் யாரையும் குறை கூற வேண்டிய அவசியமில்லை. அந்த 20வது சர்த்தை வலுவாக ஆகிய எங்களது உறுப்பினர்களின் பங்களிப்பு மிகவும் பாரதூரமானது. அதன் விளைவே இன்று நாங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். ஆகவே அந்து 20ஆவது சரத்தை இல்லாமல் ஒளித்து, இந்த நாட்டில் சரியான அரசாங்கத்தை ஏற்படுத்தி அந்நிய நாடுகளின் உதவிகளைப் பெற்றுக் இந்நாட்டினை கொண்டு செல்ல முடியும். எனவே இந்த சபையின் ஊடாக அரசாங்கத்திற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றி அதனை அரசாங்கத்திற்கு அறிவிப்பது என்பது இந்த சபையை பொருத்தமட்டில் ஒரு தேவையில்லாத விடயம் என்று கூறி விடை பெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பனர் எஸ்.எம்.எம்.முஸ்தபா அவர்கள்**
கௌரவ தவிசாளர் அவர்கள் இவ்வாறான கருத்திட்டத்தை இன்றாவது முன்வைத்து இந்த சபையின் உறுப்பினர்களுக்கு மத்தியில் உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கியமைக்கு அனைத்து உறுப்பினர்கள் சார்பிலும் கௌரவ தவிசாளருக்கு நான் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த Gota go Home என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு இந்த நாட்டின் அரசியல் நிலைமைகளில் ஸ்திரத்தன்மை ஏற்படுத்துவதற்கான இறுதிக்கட்டத்தை அடைந்தபோது, அதன் இறுதி அங்கமாக எமது முன்னாள் பிரதம மந்திரி அவர்கள் பதிவி இறக்கம் செய்யப்பட்டு இதற்கான தீர்வுக் கட்டங்கள் எட்டப்படும் என்ற சூழ்நிலை ஏற்படுகின்ற போது, இன்று பிரதமராக இருக்கும் கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்கள் வந்து இந்த நிலைமையை தலைகீழாக மாற்றினார். அவ்வாறு இல்லாமல் இருந்திருந்தால் இன்று இந்த நாட்டு மக்களுக்கு விடிவு கிடைக்கப்பெற்றிருக்கும். இந்தக் கட்டத்தில் நாங்கள் கௌரவ தவிசாளர் அவர்களினால் முன்வைக்கப்பட்ட இந்த மசோதாவை அதன் பிரகாரம் நாங்கள் செயற்படுவோம் என்று கூறுவதோடு மேலும் அதற்கு மேலாக இந்த சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்டு நாங்கள் முன்னுதாரணமாக இந்த Gota Go Home என்ற இடத்திற்கு இந்த சபையின் ஊடாக இந்த உறுப்பினர்கள் அனைவரும் அவ்விடத்திற்கு சென்று முன்மாதிரியான ஒரு இடத்தைக் காட்டிவிட்டு வரவேண்டும்.

நாங்களெல்லாம் வந்து போகின்றோம் இந்த நாடு படுகின்ற துயரம் தாங்கமுடியாமல் உள்ளது. கௌரவ தவிசாளர் அவர்கள் அவருடைய உரையில் ஆரம்பத்தில் கூறினார் எரிபொருள் நிலையத்திற்கு சென்றால் வைத்தியர் ஒருவர் அவசரமாக வந்தால் கூட அவருக்கு விட்டுக் கொடுக்க முடியாத மனநிலையில் இன்று எமது மக்கள் காணப்படுகின்றார்கள். வைத்தியர் ஒருவர் பேஸ்புக் தளத்தில் கூறுகின்றார், எதற்காக மக்கள் இந்த துயரை அனுபவிக்கின்றார்கள் என்று தெரியாமல் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். முதிர்ச்சி இல்லாத அனுபவம் இல்லாத ஒருவரிடம் இந்த நாட்டை பாரம் கொடுத்துவிட்டு மக்கள் இன்று துயரப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மக்களின் துயர் நீக்க இந்த சபையினுடைய பங்களிப்பும் இருக்க வேண்டுமென்று கௌரவ தவிசாளர் கொண்டு வந்த இந்த எண்ணக் கருவுக்கு நாங்கள் ஆதரவு தெரிவிப்பதோடு, நான் முன் வைத்தது போன்று இந்த சபை உறுப்பினர்கள் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து அந்த இடத்திற்கு சென்று எமது அங்கீகாரத்தை வழங்க வேண்டும் என்று கூறி விடை பெற்றுக் கொள்கிறேன் நன்றி.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்**

கௌரவ தவிசாளர் அவர்களே, இது எமது சபை மட்டுமல்ல உலகமே எடுத்திருக்கின்ற ஒரு முடிவு. இப்போது இருக்கின்ற ஆட்சியாளர்கள் இருந்தால் எந்த உதவியும் செய்ய மாட்டார்கள். IMF உம் இதைத்தான் கூறுகின்றது. அரபு நாடுகளும் இதைத்தான் கூறுகின்றது. முக்கியமாக இதில் இலாபம் என்னவென்றால் பெரும்பான்மையின மக்கள் இன, மத, குல பேதத்தை வைத்து இந்த நாட்டை இனிமேல் கொண்டு செல்ல முடியாது என்று அவர்கள் உணர்ந்திருக்கின்றார்கள். இது இந்த கஷ்டமான ஒரு சூழ்நிலையில் எமக்குக் கிடைத்திருக்கின்ற வெற்றி. கௌரவ உறுப்பினர் அவர்கள் கூறியது போன்று வெண்னை திரண்டு வருகின்றபோது ஆழி உடைந்தது போன்று, எமது தற்போதைய கௌரவ பிரதமர் அவர்கள் இந்த நாட்டைப் பாரம் எடுத்து திசை திருப்பப்பட்டுவிட்டது. உலகம் பூராகவும், நாங்களும் இவர் மிகவும் திறமை வாய்ந்த ஒரு மனிதர் அனுபவசாலி இவரால் ஏதோ ஒன்று எமக்கு கிடைக்கும் என்ற ஒரு எதிர்பார்ப்பு இருந்தது.

ஆனால் அதுவும் எந்த ஒரு விடயங்களும் இடம்பெறாமல் போய்விட்டது. காரணம் தற்போது உள்ள ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்பது இதில் இருக்கின்ற விடயமாகும். இந்த யுத்தத்தில் மிகவும் கூடுதலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கூடுதலான மக்கள் அழியும் காலத்தில் இவர் தலைமை தாங்கிய ஒருவர் என்பதை மறைக்கவும் முடியாத மறுக்கவும் முடியாத விடயம். இவர் ஆட்சிக்கு வந்தவுடன் அந்தப் பாதிப்படைந்த மக்கள் இந்த உலகத்துக்கு இந்த விடயத்தை எடுத்துக் காட்டினார்கள். இருந்தாலும் அதை தவிர்க்க முடியாத விடயம் என்னவென்றால் இதற்கு ஒரு நிலையான தீர்வைக்காண வேண்டும் ஆனால் அவர்கள் அதற்குரிய எந்த ஒரு விடயத்தையும் செய்யவில்லை.

நாம் கொஞ்சமாவது இந்த மலையக மக்களை யோசித்துப் பார்க்கும்போது அவர்கள் எவ்வளவு கஷ்டத்துடன் வாழ்கின்றார்கள். இந்நிலைமை இன்று எமது ஊர்களிலும் வந்துவிட்டது. கிராமப்புறங்களில் வாழும் மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். எமது சபையை பொருத்தவரையில் எவ்வளவோ முரண்பாடு எத்தனை காட்சிகள் இருந்தாலும், இந்த ஊருக்கு என்ன நன்மை செய்யலாம் என்ற நிலைப்பாட்டிலேயே அனைவரும் காணப்படுகின்றோம். இந்த சபை இதற்கு உதாரணமாக காணப்படுகின்றது. நாங்கள் கௌரவ உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று இந்த விடயத்தில் நாங்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும். இது கட்சிக்கோ, பிரதமரை பாதுகாப்பது ஜனாதிபதியை பாதுகாப்பது நோக்கமல்ல நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டும். இந்த இரண்டு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் ஒருவரினால் பாதிக்கப்பட்டு இருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. நாட்டு மக்களின் தீர்மானத்திற்கு நாங்களும் தலை சாய்க்க வேண்டும். நாங்கள் ஒவ்வொருவரும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இதில் கட்சி பேதம் எதுவும் இல்லாமல் நாங்கள் எல்லோரும் ஏகமனதாக தீர்மானத்தை எடுத்து இதனை வெளிப்படையாக தெரியப்படுத்த வேண்டும் என்று கூறி இந்த சந்தர்ப்பத்தை வழங்கியமைக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, ஒரு உறுப்பினர் பேசும் போது குறுக்கிட்டுக் பேசக்கூடாது என்ற வகையில் அமர்ந்திருந்தேன். எங்களது கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை அவர்கள் பேசியது மிகவும் கண்டிக்கத்தக்க விடயம். ஏனென்றால் அவர் UNP கட்சியில் இருக்கலாம். அவர் உள்வாங்கப்பட்டது எங்களது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில். இவரை ஒரு உறுப்பினராக்க வேண்டும் என்பதில் எங்களது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தேசிய தலைவர் எவ்வாறு கஸ்டப்பட்டார் என்பது உறுப்பினர்களை விட எனக்குத்தான் மேலதிகமாக தெரியும். ஆகவே கோழி திண்ட கள்ளன் கூட நின்று உலாவுவது போன்று உலாவுவதற்கு இடம் அளிக்கக் கூடாது. இதை வன்மையாக கண்டிக்கின்றேன். இன்றைக்கு உறுப்பினராக வந்திருக்கின்றார் என்றால் எங்களது தலைவர் கௌரவ ரவூப் ஹக்கீம் சேர் அவர்களுக்குத்தான் நன்றி கூற வேண்டும் இந்த இடத்தில். இதை விட்டுவிட்டு தலைவராக ஒருவர் கதிரையில் இருந்துவிட்டால் தகுதியானவர் இருக்கின்றார் என்று சொல்லி பேரம் பேசும் பேசுவது எந்த வகையில் நியாயம். மக்கள் படும் கஸ்டம் வாழத் தெரியாமலும், இந்தப் பதவியை எவ்வாறு வழிநடாத்துவது என்றும், நான் ஒரு பிரதமராகிவிட்டேன் மீண்டும் கோசம் போடுவதற்கா அந்தப் பதவி வழங்கப்பட்டது. இது மக்களுக்கு நாங்கள் செய்யும் துரோகம். இவ்வாறான ஒரு ஒட்டகப் பேச்சை நிறுத்த வேண்டும்.

இந்த நேரத்திலே எங்களது கௌரவ உறுப்பினர் ஏன் இதை கொண்டுவந்தார் என்பது மனவருத்தம். அவர்களுடைய பிள்ளைகள் கஸ்டப்படவில்லையா? குடும்பம் கஸ்டப்படவில்லையா? இந்தப் பொதுமக்கள் படும் கஸ்டம் உங்களுக்கு தெரியாது. ஒவ்வொருவரும் வேலை செய்யும் இடத்தில்தான் தெரியும். இன்றைக்கு வறுமை என்ற பேரணியிலே எங்களது மக்கள் எவ்வாறு அலைந்து திரிகின்றார்கள் அதுவும் நடுத்தர குடும்பத்தினர். தொழிலும் இல்லாமல் வீட்டில் எதுவும் செய்ய இயலாமல், வீட்டிலே இருக்கின்ற பொருளை விற்க இயலாமல் படும் கஸ்டம் பெண்களாகிய எங்களுக்குத்தான் கூடுதலாக தெரியும். வைத்தியசாலைக்கு வரும் போது ஒரு உடுப்புப் கூட கொண்டு வருவதற்கு வசதி இல்லாமல் இருக்கின்றார்கள். இது தெரியாமல் நீங்கள் எங்களுக்கு ஒரு கட்சி, எங்களுக்கு ஒரு பிரதமதர், இவர் இந்தப் பதவியில் இருக்க வேண்டும் என்று பேசுவது எந்த வகையில் நியாயம். கௌரவ உறுப்பினர்களே இனி நியாயமாக பேசிக் கொள்ளுங்கள்.

அத்தோடு ஒரு சிறிய உரை ஒன்று இருக்கின்றது. கௌரவ தவிசாளர் அவர்கள் சொன்னது போன்று வறுமை நிவாரணம் என்ற பணியில் உண்மையிலே ஒரு வேளை உணவு என்ற தொனியில் நாம் எல்லோரும் உள்வாங்கப்பட வேண்டும் என்று நானும் எனது உள்ளார்ந்த மனமார்ந்த நம்பிக்கையை தெரிவித்துக் கொள்வதோடு, Hopes அமைப்பு ஒன்று வறுமை நிவாரணப் பணியில் 4 வருடமாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதில் நானும் ஒருவர். இந்த அமைப்பு நாங்கள் எங்களது சொந்தப் பணத்தை வைத்துதான் செய்து கொண்டு வந்திருந்தோம். இப்போது இருக்கின்ற கால சூழ்நிலையில் தனியாக செய்வது கஸ்டமாக இருக்கின்றது. ஏனென்றால் இளைஞர்கள் குறைவானவர்கள்தான் இதை வழிநடாத்தி வருகின்றோம். இந்த அமைப்பினால் ஹஜ் பெருநாள் தினத்தன்று சமைத்து சாப்பிடக் கூடிய உணவாக இறைச்சி உட்பட அரிசி எல்லாம் சேர்ந்து 3000.00 ரூபா பொதி ஒன்று வழங்கப்படுகிறது. அந்தப் பொதிக்கு எங்களால் ஒரு பொதிக்காவது இந்த உதவியை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். கௌரவ தவிசாளர் அவர்கள் சொன்னது போன்று நானும் வெளிநாட்டு தொடர்பு கொண்டு சிறிய தொகை பணங்களை பெற்றுக் கொடுத்திருக்கின்றேன். ஆகவே இதற்கு எங்களது பூரண உதவியையும் கொடுத்து நாங்களும் தர்மம் என்ற வலைக்குள் உள்வாங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன்,

அரச உத்தியோகத்தர்களாகிய பெண்களுக்கு கணவன் இறந்தால் இத்தா கடமை 04 மாதம் 10 நாள் என்ற ஒன்றை அங்கீகரிக்கக்கூடாது என்று பாராளுமன்றத்தில் ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உண்மையிலே இது எங்களது மார்க்க விழுமியங்களுக்கும், எங்களது கலாசாரங்களுக்கும் ஒரு இடையூறாக இருக்கின்றதனால் எங்கள் சபை ஊடாகவும் இதற்கான ஒரு தீர்மானத்தை நாங்கள் அனுப்பலாம் என்று நினைக்கின்றேன். அத்தோடு விவாகம் விவாவகரத்து என்ற ஒரு பேரணி தொடர்ந்து சென்று கொண்டிருக்கின்றது. விவாகம், விவாகரத்து என்பதற்கு காழி நீதிமன்றத்தை இல்லாதொழித்தல். உண்மையிலே மிகவும் சிரமமான ஒன்று.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இவைகளை பிறகு கதைப்போம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தற்போதுள்ள அரசாங்கத்தின் மீதான அல்லது ஜனாதிபதி மீதான அதிதிருப்தியை தெரிவித்தல் சம்மந்தமாக தங்களுடைய உரையில் ஒருத்தரை தவிர என்ற வசனத்தை கூறியிருந்தீர்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இரண்டு பேரை தவிர என்று சொல்லி இருக்க வேண்டும். மன்னித்துக் கொள்ளுங்கள்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த அவையில் இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களையும் விடவும் தவிசாளர் அவர்களுக்கு என்னைப் பற்றியும் எனது கொள்கைகளைப் பற்றியும் தங்களுக்கு நன்றாக தெரியும். நான் பதவிகளுக்காகவும் அல்லது ஆசனத்துக்காகவும் அந்த ஆசனத்தில் இருந்து கொண்டு ஆசனத்தை சூடாக்குபவனல்ல. எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடாக கடந்த பாராளுமன்ற தேர்தல் கேட்பதற்கு. அதில் தேர்தல் கேட்டேன்.

மக்கள் எனக்கு வாக்களிக்காமல் என்னை நிராகரித்தார்கள். அதனை நான் பொருட்படுத்தாமல் எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டேன். அதன் ஊடாக என்னுடைய ஊருக்கும், என்னுடைய மக்களுக்கும் என்னால் செய்யக்கூடிய உதவிகளையும், அபிவிருத்திகளையும் நான் செவ்வனே செய்துள்ளேன். இந்த ஊரில் எவரும் செய்யாத எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் செய்திடாத சேவைகளை செய்துள்ளேன். இதனை நினைத்து மிகவும் ஆத்ம திருப்தி அடைகின்றேன். சந்தோசம் அடைகின்றேன். எவரும் எதிர்பார்க்கவில்லை துரதிஸ்டவசமாக இப்படி இந்த அரசாங்கம் பொருளாதார வீழ்ச்சியால் திவாலாகும் நிலைக்கு வரும் என்று, அதற்காக நான் பொதுஜன பெரமுன கட்சிக்காரனும் அல்ல. முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக் காரனும் அல்ல. அல்லது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிக் காரனும் அல்ல. நான் எந்தக் கட்சிக் காரனும் அல்ல. இவ் விடயங்கள் சம்மந்தமாக நான் கடந்த 2,3 மாதாந்த எங்களது அவைக் கூட்டத்திலும் பேசி இருக்கின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, எனக்கு கட்சி என்பது ஒரு வேதமும் அல்ல, ஒரு மார்க்கமும் அல்ல. ஏனென்று சொன்னால் நாங்கள் ஒரு சிறுபான்மை சமூகமாக இருந்து கொண்டு வீரவசனம் பேசிக் கொண்டு எதிர்க்கட்சி அரசியல் செய்ய முடியாது. ஆளும் கட்சியுடன் சேர்ந்து போவதுதான் எம் சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். எனவே தேர்தல் காலங்களில் என்னுடைய ஊர் மக்களின் அபிலாசைகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக எனது இலக்கை அடைவதற்கான வாகனம் தான் கட்சி என்பது, காலத்திற்கு ஏற்றவாறு எந்த கட்சி எனும் வாகனத்தில் ஏறினால் எனது இலக்கை அடைய முடியும் என எனக்கு தோன்றுகிறதோ அந்தக் கட்சி எனும் வாகனத்தில் ஏறிப் பயணிப்பவன் நான். நான் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்தக் கட்சியின் ஊடாக என்னுடைய பிரதேசத்திற்கும் என்னுடைய மக்களுக்கும் எதை செய்ய முடியுமோ அதை செய்யக்கூடியவன்தான் நான். வெறுமனே நான் ஒரு கௌரவ உறுப்பினர் அல்லது நான் ஒரு மக்கள் பிரதிநிதி என்று வளம் வருபவன் அல்ல. என்னால் இயன்ற முயற்சிகளை நான் மக்களுக்கு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு இருப்பவன்தான் நான். நான் தற்போது எந்தக் கட்சிக் காரனுமல்ல. நான் தற்போது சுயமாக இயங்கிக் கொண்டு வருகின்றேன். இவ்விடயத்தை கௌரவ தவிசாளர் மற்றும் ஏனைய கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஆனால் இந்த நாட்டில் தற்போது இடம்பெற்று வருகின்ற விடயத்தை எல்லோரும் அறிவுபூர்வமாக அவதானிக்கையில் எங்களுடைய நாட்டுக்கு ஒரு மறைமுகமான பொருளாதார தடை ஒன்று ஏற்படுகின்றது. இதில் கடந்த காலங்களில் எங்களுடைய ஜனாசாக்களை எரித்ததற்கான ஒரு பழிவாங்களாகவும் அல்லது அல்லாஹ்வுடைய ஒரு தண்டனையாகவும் இருக்கலாம். இதனை எவராலும் மறுக்க முடியாது. அங்கே சவூதி அரேபியாவுக்குச் சென்றால் கோட்டாவை வெளியேற்றுங்கள் உங்கள் நாட்டுக்கு தேவையான உதவிகளை செய்கின்றோம் என்று கூறுகின்றார்கள். அங்கே ரஷ்யாவுக்குச் சென்றால் முன்னாள் பிரதமர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களை மீண்டும் பிரதமராக்கப்பட வேண்டும் என்ற கூறுகின்றார்கள். அங்கே அமெரிக்காவுக்கு சென்றால் ரணில் விக்ரமசிங்க அவர்கள் பிரதமராக இருக்க வேண்டும் என்று கூறுகின்றார்கள். இவ்வாறு உலகில் உள்ள ஒவ்வொரு நாடுகளும் விரும்புகின்ற மாதிரி ஆட்சியை மாற்றி மாற்றி அமைத்துக் கொள்ள முடியாது. ஆனால் எங்களுடைய மக்கள் தேவைகளை நாங்கள் கவனத்தில் கொண்டு எங்களுடைய மக்களை பாதுகாப்பதற்காக. இதில் முஸ்லிம்கள் என்றோ அல்லது தமிழர்கள் என்றோ அல்லது, சிங்களவர்கள் என்றோ அல்லாமல் இன மத வேறுபாடுகளுக்கப்பால் மக்களை பாதுகாப்பதற்கான ஒரு முடிவினை எடுக்க வேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம்.

எங்களது முடிவு எப்படி இருக்க வேண்டுமென்று சொன்னால் அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ அவர்களுக்கு வாக்களித்த மக்களே இப்போது போர் கொடி தூக்கிக் கொண்டிருக்கும் போது நாங்கள் முஸ்லிம்கள் என்று வசனம் பேசுவதை விட நாங்கள் எல்லோரும் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் எதிர்க்கவேண்டுமென்றால் எதிர்க்க வேண்டும். ஜனாதிபதி ஒருத்தருக்காக 2 கோடியே இருபது இலட்சம் மக்களை எதிர்க்க முடியாது. அம் மக்களுடைய ஆணைகள் இல்லாமல் ஆசனத்தில் எவரும் அமர முடியாது. மக்களோடு சேர்ந்து போவதுதான் எங்களுடைய அல்லது என்னுடைய தார்மீகக் கொள்கையாகும். கட்சி கட்சி என்று மார்க்கம் மார்க்கம் என்று பார்த்து அதற்கு பின்னால் செல்கின்ற ஆள் நான் இல்லை. நீங்கள் இந்த அரசாங்கத்திற்கு எதிராகவோ,

அல்லது ஜனாதிபதிக்கு எதிராகவோ எந்த தீர்மானத்தினை எடுத்தாலும் அதற்கு நான் உடன்படுகின்றேன் என்பதனை தங்களுக்கு தெரிவித்துக் கொண்டு, எங்களுடைய கௌரவ உறுப்பினர் சரிபா அவர்கள் கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை அவர்களுக்கு பேசியது போன்று அல்லாமல் ஐக்கிய தேசிய கட்சிக்கும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் காரணமாகத்தான் அவர் இந்த அவையில் ஒரு கௌரவ உறுப்பினராக வந்திருக்கின்றார். முஸ்லிம் காங்கிரசால் அவரை உறுப்பினராக்கப்படவில்லை என நினைக்கின்றேன் என்ற விடயத்தை கூறியவனாக வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி. வஸ்ஸலாம்.

## தீர்மானம் - 04/53/07

மக்களின் விருப்புகளை மதித்து சர்வ மத தலைவர்களின் வேண்டுகோளை உள்வாங்கி இந்த அரசு மக்களின் கட்டளைக்கு அடிபணிய வேண்டும். தவறும் பட்சத்தில் இந்த நாட்டில் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு பொறுப்பு கூற வேண்டும் என்ற ஒரு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌஸாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

### கௌரவ தவிசாளர் அவர்கள்:

இது கட்சி அரசியல் செய்கின்ற இடம் அல்ல. நான் அரசியல் சம்மந்தப்பட்ட விடயத்திலோ, நிர்வாகம் சம்மந்தப்பட்ட விடயத்திலோ அவசரப்படுபவன் இல்லை. கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் என் பாதையில் போகின்றார் என்பதற்கு ஆச்சரியமில்லை. நான் எப்போதும் சொல்வது கட்சி ஒரு வாகனம். இன்றைக்கு இந்த நாட்டில் நான் விளங்கப்படுத்தினேன் ஒரு பிரதேச சபை ஒரு குட்டி அரசாங்கம் என்ற ரீதியில் ஜனாதிபதி பதவி விலக வேண்டும், பிரதமர் பதவி விலக வேண்டும் என்று ஒரு தீர்மானம் எடுக்க முடியாது. ஆனால் பெரும்பான்மை மக்களின் மதகுருமார், தொழிற்சங்கங்கள் எல்லாவற்றிலும் இன்று எழும்பியுள்ள அந்த குரலை ஆட்சியாளர்கள் மதிக்க வேண்டும். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு அதுதான் என்றால் அந்த தீர்வுக்கு வர வேண்டும் என்ற முடிவை எடுக்க வேண்டிய கட்டம். என்னை விட இந்த சபையில் கௌரவ பிரதமரைப் பற்றி அறிந்தவர் வேறொருவரும் இருக்க முடியாது. அவர் பிரதமராக நியமிக்கப்பட்டதும் நான் இங்கு பலரிடம் கூறியிருக்கின்றேன். அவரினால் இந்தப் பிரச்சினையை அணுக முடியாவிட்டால் இந்த நாட்டில் அனுபவமுள்ள ஆற்றலுள்ள எந்தவொரு அரசியல் தலைமைத்துவங்களும் இல்லை என்பதில் இன்றும் உறுதியாக இருக்கின்றேன்.

கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் சொன்னது போல் இன்று உலக நாடுகள் கொவிட் வந்த காலத்தில் இருந்து அதற்கு முன் ஈஸ்டர் தாக்குதல் சிறுபான்மைகளுக்கு எதிரான அடக்கு முறைகள் ஆரம்பித்த காலத்தில் இருந்து இந்த நாட்டுக்கு எந்தவொரு நிபந்தனையும் இல்லாமல் உதவியை வழங்கிய நாடுகள் இந்த அரசு இருக்கும் வரை எந்த உதவியும் செய்வதற்கு தயார் இல்லை என்பது இன்று உறுதியாகிவிட்டது. அமைச்சர்கள் வெளிநாடு சென்றார்கள். இன்று நான் ஆச்சரியப்பட்டேன் கௌரவ அமைச்சர் காஞ்சன விஜயசேகர சொல்கின்றார் கட்டார் பெற்றோல் வியாபாரம் செய்வதில்லை. டீசல், Gas மட்டும்தான் தருவார்கள். ஆனால் ஒரு வாக்குறுதியும் வழங்கப்படவில்லை. இது உள்ளூர் பிரச்சினை மட்டுமல்ல இது ஒரு உலக அரசியல் அரங்கில் நடத்தப்படுகின்ற ஒன்று, நமது பிள்ளைகளுக்கு இப்படியான நாட்டை இந்த நிலைக்கு கொண்டு வந்ததற்கு நாம் எல்லோரும் பொறுப்பு. நமது தாய் தந்தையர்கள் எம்மைப் போல் நடக்கவில்லை. நமது தாய் தந்தையர்கள் ஒவ்வொரு வீட்டுக்கும் இவ்வளவு வாகனம் என்று செல்லவில்லை. இந்த நிலையை மாற்றுவது என்றால் அந்தப் பயணத்தில் நாமும் பங்காளிகளாக மாறத்தான் வேண்டும். வேறு வழியில்லை. அதனால் சபை என்ற ரீதியில் கௌரவமாக மக்கள் குரலுக்கு அடி பணிய வேண்டும் என்ற வேண்டுகோளை நாம் விடலாமே தவிர, ஜனாதிபதி விலக வேண்டும், பிரதமர் விலக வேண்டும் என்பது மக்களின் வேண்டுகோளே தவிர நாம் சபை என்ற ரீதியில் ஒரு அறிவித்தலை செய்வதற்கு இந்த சபை ஏகமனதாக முடிவு எடுத்ததாக எடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று நமது பிரதேசத்திலே 15 நாட்களுக்கு பின்னர் வேளாண்மை அறுவடை செய்யக்கூடிய நிலை இருப்பதனால் வேளாண்மை அறுவடை செய்வதற்கு போதியளவு எரிபொருள் இல்லாத காரணத்தினால் எங்களுடைய பிரதேசத்தில் யானை தொல்லையும் உள்ளது. அதனால் குறிப்பிட்ட 15 நாட்களுக்குள் விவசாயிகள் தங்களுடைய வேளாண்மைகளை அறுவடை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்படும். எனவே நீங்கள் ஒரு சிறந்த விவசாயி. அதுமட்டுமல்லாமல் விவசாய குழுக்களின் தலைவரும் கூட. அந்த வகையில் எங்களது பிரதேசத்தின் விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் எரிபொருள் சென்றடைவதற்கு உரிய நிலைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று உங்களை கேட்டுக் கொள்வதோடு, அவ்வாறு நாங்கள் எரிபொருளை கொடுக்கும் போது விவசாயிகளின் கையிலே சென்றடையக்கூடியவாறு கொடுத்தால் வெளியூர்களில் இருந்து வருகின்ற அறுவடை இயந்திரங்களைக் கொண்டு அறுவடை செய்ய வாய்ப்பாக இருக்கும். அத்தோடு அந்த முறையிலே சில வட்டைகள் முந்தி அறுவடை செய்யக்கூடிய நிலையில் இருப்பதனால் சேனக்காடு பிரதேசத்தை முதன்மைப்படுத்தி அவர்களுக்கு முதலில் டீசல் கிடைக்கக்கூடிய ஒரு ஏற்பாடையும் செய்து தந்தால் பெரிய உதவியாக இருக்கும் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர் அவர்களே, ஒரு விசேட கூட்டம் எல்லா பிரதேச செயலகங்களிலும் நடாத்தப்பட்டு வயல் சொந்தக்காரர்களுக்கு அவர்களின் வயலை அறுவடை செய்யக்கூடிய தேவையான எரிபொருளுக்குரிய ஆவணம் அவர்களுக்கு வழங்கப்படும். அம்பாரை மாவட்டத்தில் முற்றாக அறுவடை செய்வது என்றால் 4.2 மில்லியன் லீற்றர் டீசல் தேவைப்படுகின்றது. அதை ஒவ்வொரு கிழமையிலும் எவ்வளவு வர வேண்டும் என்ற கணிப்பை செய்து அரசுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அது வரும் பட்சத்தில் நிச்சயமாக விவசாயிகளுக்கு வழங்கப்படும். இன்று இந்த நாட்டில் 100% நெல் விதைத்திருக்கின்ற பகுதி அம்பாரை மாவட்டம் தான். அதனால் அரசும் அம்பாரை மாவட்டத்திற்குரிய விவசாயிகளுக்கு எரிபொருள் வழங்குவதற்கு மிகவும் அக்கரையாக இருக்கின்றது. நிச்சயமாக அந்த முறையில் வழங்க ஏற்பாடுகள் தற்போது செய்யப்பட்டிருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற எரிபொருள் தட்டுப்பாடு எல்லா மக்களையும் பாதிக்கக் கூடியதாக இருக்கின்றது. இந்த நிலையில் மாணவர்களின் கல்வி நிலை மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்படுகின்றது. எமது கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் பாடசாலைகளை நடாத்துவதற்கு கல்வி அமைச்சினால் பாடசாலைகளை நடாத்துங்கள் என்று அறிவித்தல் கொடுத்திருக்கின்றார்கள். பாடசாலைகளை திறந்து வைத்திருப்பதனால் பாடசாலைக்கு மாணவர்கள் செல்லும் வீதம் குறைவாகவே இருக்கின்றது. அவர்களுடைய கற்றல் நடவடிக்கைகளை அவர்களுடைய Syllabus களை முடிக்க வேண்டும் என்பதற்காக ஒரு மாணவர் வந்தால் கூட கல்வி நடவடிக்கைகளை எடுத்துச் செல்கின்றார்கள். இந்த நிலையில் பாடசாலைக்கு செல்லாத ஒவ்வொரு மாணவர்களும் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதுடன் எமது பிரதேசத்திலுள்ள மிகவும் பிரபல்யம் வாய்ந்த பாடசாலைகளில் காலை நேரங்களில் கல்வி கற்கும் பாடங்களின் மீதியை மாலை நேர வகுப்புக்களில் ஆசிரியர்கள் பாடத்தை கற்றுக் கொடுக்கின்றார்கள். காலையிலும் மாலையிலும் பாடசாலைக்கு செல்லாத பிள்ளைகளின் நிலை மிகவும் கவலையாகவும், மன வேதனையாகவும் இருக்கின்றது.

இதில் மாலை நேர வகுப்புகளுக்கு செல்கின்ற மாணவர்களுக்கு பிரத்தியோக பாடத்திற்கான கட்டணங்களை அறவிட்டு அதிபர்களுக்கு ஒரு கட்டணமாகவும் பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஒரு கட்டணமாகவும் அறவிடுகின்றார்கள். எங்களது பிரதேசத்தில் பேர்போன பாடசாலை மகளிர் பாடசாலை. அந்தப் பாடசாலையில் எங்களுடைய பிள்ளைகள் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அதை ஒரு Royal College ஆக நினைத்து கைகாட்டியில் இருக்கின்ற என்னுடைய பேரப் பிள்ளைகள் கூட அந்த பாடசாலையில் கல்வி கற்க வருகின்றது. அந்தப் பிள்ளை இன்று இடை விலகி வேறு பாடசாலைக்கு செல்கின்றது. அந்தப் பாடசாலையில் இருக்கின்ற நண்பர்கள் கல்வி கற்றுக் கொடுத்த ஆசிரியை அவர்களை விட்டு விலகி வேறு

பாடசாலைக்கு செல்வதனால் இப் பிள்ளை மன உளைச்சலுக்கு உள்ளாகின்றது. இது தற்போது எமது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற எரிபொருள் தட்டுப்பாட்டாலும் பொருளாதார வீழ்ச்சியாலும் வருகின்ற பிரச்சினை. ஆனால் அந்தப் பாடசாலையின் நிர்வாகத்தை கையில் எடுத்திருக்கின்ற அதிபர் பிரத்தியோக வகுப்பு கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு நேரத்தை கொடுத்தும் அப் பிள்ளைகளுக்கு கட்டணம் 700.00 ரூபா அறவிட்டு அதில் 100.00 ரூபா அவருக்கு Commission. காலையில் படிப்பிப்பதை பின்னேரம் படிப்பிக்கின்றார்கள். இவ்வாறான கட்டணங்களை அறவிட்டு வியாபாரம் நடக்கின்றது அப் பாடசாலையில். இது எனக்கு உத்தியோகபூர்வமாக கிடைத்த தகவல். யார் சொன்ன என்று இவ்விடத்தில் வெளியிட இயலாது. எல்லோரினது பிள்ளைகளும் கல்வி கற்று விலகி இருக்கின்றார்கள். கல்வி கற்றுக்கொண்டிருக்கின்றார்கள். கல்வி கற்றுக் கொடுக்கின்ற ஆசான் நாம் போற்றக்கூடிய மகான். அப்படியானவர்களாக இருந்தும் இப்படியான தவறுகளை செய்யும் போது எல்லாப் பிள்ளைகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அதே போன்று எங்களது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடி வசதி படைத்தவர்கள் இருந்து வறியவர்களுக்கு கூட இந்த பொருளாதார நெருக்கடி வந்திருக்கின்றது. இதில் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் இளைஞர்களும், யுவதிகளும். அவர்கள் தங்களுடைய தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாட்டுக்கு சென்று நாட்டை கட்டியெழுப்பக்கூடிய நிலையில் எங்களுடைய நாடு மிகவும் வறுமைக் கோட்டில் வாழ்கின்றது. கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் சொன்னது போன்று ஜனாதிபதி அவர்களும் கௌரவ பிரதம மந்திரி அவர்களும் அவர்களுடைய ஆட்சி முறையை மாற்றக் கோரி வாக்களித்த மக்கள் போராட்டத்தில் கூடுதலாக நிற்கின்றார்கள். அதற்கு நாங்களும் எங்களது சபை ஊடாக ஆதரவை வழங்குவோம் என்று எனது பேச்சை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் நிலுவ்பா அவர்கள் எடுத்த விடயம் பாடசாலை நிர்வாகம் பாடசாலையில் பிரத்தியோக வகுப்புக்கள் நடப்பது என்றால் பெற்றோர்களினது ஒத்துழைப்பு இல்லாமல் நடத்த முடியாது. பிரதேச சபை என்ற ரீதியில் நீங்கள் சொல்கின்ற கருத்துக்களை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எழுதலாம். ஆனால் அந்தப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் முறையீடாக செய்யாவிட்டால் குழந்தைகளின் கல்வியில் தலையிடுகின்றோம் என்ற குற்றச்சாட்டு வரலாம். இந்த ஏற்பாடு பெற்றோர்களுடனும் சேர்ந்துதான் செய்யப்பட்டு இருக்க வேண்டும். அப்படி இல்லாவிடில் அதை நாம் அவர்களின் கல்வி நடவடிக்கைகளில் தலையிடுவதாகவும் வரலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதில் ஆசிரியர்கள் சொல்வது என்னவென்றால் உங்களது பிள்ளைகளுக்கு நாங்கள் ஒழுங்கான முறையில் கற்பிக்க வேண்டும். நீங்கள் உங்களது பிள்ளைகளை அனுப்ப வேண்டும் என்று பெற்றோர்களிடம் சொன்னால் பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வியை மையமாக வைத்து என்னுடைய பிள்ளை படிக்கின்றது. நான் வகுப்பிற்கு கூட்டிச் செல்கின்றேன். அதை அவர்களின் மனநிலைக்கு கொண்டு வந்துவிட்டார்கள். பெற்றோர்களிடம் திணிக்கப்பட்டிருப்பதால் காலையில் செல்கின்ற மாதிரித்தான் பிரத்தியோக வகுப்பையும் கடைப்பிடித்து பிள்ளைகளை அனுப்புகின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அவர்கள் அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அவர்களின் உடன்பட்டு போனவுடன் நாம் வெளியில் இருந்து அதை தடை செய்ய இயலாது. பெற்றோர்கள் பிள்ளைகளை அனுப்பாவிட்டால் அந்தப் பிரச்சினை இல்லை. ஆனால் பெற்றோர்களுக்கு அதை படிப்பிக்க வேண்டும் என்றால் அந்த வகுப்பு நடக்க வேண்டும். வகுப்பு நடாத்துவதற்கு வலயக் கல்விப் பணிப்பாளருக்கு கீழ் அதிபர்கள் அதை அவர்களுக்கு ஒரு கடமையாக்கினால் இந்தப் பிரச்சினை வராது. ஆனால் அது உங்களுக்கு தெரியும் எல்லா ஆசிரியர்களின் வீட்டிலும் வகுப்பு நடக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, காலையில் பாடசாலைக்கு ஆசிரியர்கள் செல்வதற்கு எரிபொருள் தட்டுப்பாடு. பிரத்தியோக வகுப்புகளுக்கு செல்வதற்கு எந்தவிதமான எரிபொருள் தட்டுப்பாடும் இல்லை. இதனால் பாதிக்கப்படுவது பிள்ளைகளும், பெற்றோர்களும் என்பது அவர்களுக்கு விளங்குதில்லை. ஆனால் அவர்கள் அந்த வியாபாரத்தை செய்கின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கற்பித்தல் ஒரு வியாபாரம் தான். அந்தக் கருத்தை நாம் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு இப்படியான கருத்துக்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றது என்று பிரதேச சபையால் எழுதுவோம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் நிலுவ்பா சொன்ன மாதிரி இது முழுக்க முழுக்க பெற்றார்களின் குற்றம் என்னைப் பொருத்தவரையில். ஏனென்றால் அந்ததந்த பிரதேசத்தில்தான் பிளைகளை சேர்க்க வேண்டும். நாம் உரிய பிரதேசத்தில் பாடசாலைகளை வைத்துக் கொண்டு கைகாட்டியில் இருந்து மகளிர் வித்தியாலயத்திற்கு வர வேண்டிய அவசியம் இல்லை. அந்தந்த பிரதேசத்தில் அந்தப் பிள்ளைகள் நடந்து அப் பாடசாலையில் கற்றுக் கொள்ளலாம். அடுத்த விளக்கம் என்னவென்றால் நான் ஒரு பெற்றார் சார்பாக இவ்விடத்தில் எழும்பிக் கதைக்கின்றேன். எங்களுடைய உறுப்பினர் நிலுவ்பா அவர்கள் கதைத்த மாதிரி பின்னேரங்களில் வகுப்பு வைக்கின்றார்கள். பெற்றோர்களின் ஆலோசனைக்கு இணங்கத்தான் வகுப்பு வைக்கின்றார்கள்.

எங்களுடைய பிள்ளைகளை தூரம் அனுப்ப முடியாது. என்னுடைய பிள்ளை Scholarship தான். Scholarship இல் நான் எனது பிள்ளைகளுக்கு கூடுதலான ஆர்வம் செலுத்துவதில்லை. ஆனால் அந்தப் பிள்ளை பின்னேரங்களில் விளையாட்டை கூட்டுகின்றார்கள் என்ற காரணத்திற்காக நாங்களும் அந்தக் குழுவில் இருக்கின்றோம். பெற்றார் குழுவில் இருக்கின்ற காரணத்திற்காக அதிபரிடமும், ஆசிரியர்களிடமும் கூறிய விடயம் என்னவென்றால் பின்னேரங்களில் வகுப்பு வைக்கச்சொல்லி. பணத்தை கேட்டவுடன் நாங்கள் சந்தோசமாகத்தான் கொடுத்தோம். பிள்ளைகளை அந்தளவு ஆசிரியர் கவனிக்கின்றார். எனது பிள்ளையின் ஆசிரியரின் வகுப்பறைக்குள் சென்றால் எங்களுக்கு வெட்கமாக இருக்கும். ஏனென்றால் அந்த வகுப்பறை அமைதியாக இருந்து அந்தப் பிள்ளைகளை தனியாக வைத்து அவர் மாணவர்களின் கதிரையில் இருந்து மிகவும் கஸ்டப்பட்டு பாடத்தை கற்பித்துக் கொடுக்கின்றார். ஆகவே நாங்கள் அந்தப் பணத்தை கொடுப்பதை சுமையாக நினைக்கவில்லை. ஆனால் நீங்கள் அந்தந்த பிரதேசத்தில் பிள்ளைகளை படிப்பித்தால் அதிபரும் ஆசிரியர்களும் கவனம் செலுத்துவார் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால் 5ம் ஆண்டு பிள்ளைகள் விரும்புகின்ற அளவுக்கு படிக்க வேண்டும். ஏனென்றால் 6ம் ஆண்டு பாடப்பரப்பு மாறுகின்றது. இதற்காக பிள்ளைகள் தயாராக வேண்டும். திணிக்கக்கூடாது ஆனால் படிக்க வேண்டும்.

**தீர்மானம் - 04/53/08**
பாடசாலைகளில் பிரத்தியோக வகுப்புகளுக்காக மாணவர்களிடமிருந்து பெருந் தொகைப் பணம் அறவிடுவது தொடர்பில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவிப்பதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, விடயங்கள் மாறி சென்று கொண்டிருக்கின்றது. எரிபொருள் சம்மந்தமான பிரச்சினையில் நீங்கள் கௌரவ உறுப்பினர்களுக்குரிய தீர்வுதான் சொல்லிருக்கின்றீர்களே தவிர கிராமத்திற்கான ஒரு தீர்வை காணவில்லை. எரிபொருள் பிரச்சினை என்பது எங்களுடைய சம்மாந்துறையில் மட்டும்தான் தொடர்ச்சியான பிரச்சினை வந்துகொண்டிருக்கப்போகின்றது. எல்லா கிராமங்களிலும் சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை, அட்டாளைச்சேனைகளில் IOC செட் இருக்கின்றது. அதன் மூலமாக பிரச்சினைகள் கொஞ்சம் கொஞ்சமாக தீர்க்கப்படுகின்றது. சம்மாந்துறையை பொருத்தமட்டில் IOC செட் இல்லை. ஆகவே வளத்தாப்பிட்டியில் புதிதாக அமைக்கப்பட்ட செட் கூட லங்கா சிலோன் இற்குரிய செட்தான். சம்மாந்துறையில் தொடர்ச்சியான பிரச்சினை இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே IOC இல்லாத இந்த ஊரில் 05 செட்களில் ஒன்று குறிப்பாக வளத்தாப்பிட்டியில் அமைத்த செட்டை தவிர நகர்ப்புரத்தில் இருக்கின்ற ஏதாவது ஒரு செட்டில் IOC இல் இருந்து கொண்டுவரப்படுகின்ற எரிபொருளை விநியோகிப்பதற்கு சபையால் முடியாவிட்டாலும் அதற்கு ஏதாவது நிறுவனங்கள் திணைக்களங்கள் திணைக்கள தலைவருடன் பேசி அதற்குரிய ஏற்பாடை செய்ய வேண்டும் என்று வினயமாக இவ்விடத்தில் வேண்டிக்கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் ஆரம்பத்தில் பேசும் போது கௌரவ உறுப்பினர் இருக்கவில்லை என்று நினைக்கின்றேன். ஆரம்பத்தில் நான் சொன்னேன். இந்த திட்டத்தை உருவாக்குவதற்கு முதல் கூப்பன் கொடுத்தவுடன் எல்லோரும் அதுதான் தீர்வு என்று நினைத்தோம். ஆனால் தற்போது கூப்பன் இல்லை. அதனால் இன்றைக்கு மேல்மட்டத்தில் இதை கூடி ஆராய்ந்து இதை எப்படி தீர்க்கலாம் என்ற முடிவு எடுக்க வேண்டும். IOC ஐ பொருத்தவரையில் அது ஒரு தனியார் நிறுவனம். IOC வந்த நேரம் இந்த நாட்டின் ஒப்பந்தப்படி நூற்றுக்கணக்கான எரிபொருள் நிரப்பு நிலையம் பாரம் கொடுக்கப்பட்டது. சம்மாந்துறையில் IOC ஐ எடுப்பதற்கு ஒருவரும் விரும்பவில்லை. அதனால் அட்டப்பளம், சாய்ந்தமருதில் அமைக்கப்பட்டது. அது அவர்களின் தனிப்பட்ட முடிவு. IOC இன்றைக்கு எடுத்துவருகின்ற பெற்றோல், டீசலுக்கு டொலர் கொடுக்க தேவையில்லை. இந்தியா நிறுவனம் இலங்கை நிறுவனத்திற்கு அனுப்புகின்றது. அவர்கள் ஒரு போட்டிக்காக இந்த நடவடிக்கையை செய்கின்றார்கள்.

பெற்றோலியம் நிறுவனம் டொலர் செலுத்தித்தான் எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்களின் கடன் திட்டத்தின் கீழ் வர வேண்டும். கடன் திட்டத்தின் கீழ் இறுதிக் கப்பல் வந்து முடிந்து விட்டது. அடுத்த கடன் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். IOC ஐ பொருத்தவரையில் டொலர் பிரச்சினை இல்லை. நீங்கள் சொன்னமாதிரி Ceypetco இற்கு ஒரு பிரச்சினை வருமானால் சம்மாந்துறை விவசாயிகளின் பிரச்சினையை எப்படி தீர்ப்பது என்பதுதான் இன்றைய கூட்டத்தின் நோக்கமாக இருக்கின்றது. பொதுமக்கள், அரச ஊழியர்கள், அத்தியாவசிய சேவை ஊழியர்கள், விவசாயிகள், அறுவடை இயந்திர சொந்தக்காரர்கள் என்ற ரீதியில் இதை எப்படி கொண்டு செல்லலாம் என்று முடிவு எடுக்க வேண்டியதாக இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இங்கு பிரச்சினை IOC யா? Ceypetco வா? இல்லை. இங்கு இருக்கின்ற Ceypetco நிறுவனத்திற்குரியது IOC மூலமாக கிடைக்க வேண்டும். அதற்குரிய திட்டத்தை அமைத்து முன்மொழிய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
IOC, பெற்றோலியம் இரண்டும் வியாபாரத்திற்காக செய்கின்றார்கள். IOC தனியார் நிறுவனம். பெற்றோலியம் அரசாங்கத்திற்குரியது. தனியார் நிறுவனம் என்பதால் அதை திணிக்க இயலாது. இது தேசிய மட்டத்தில் எடுக்க வேண்டிய முடிவு.

**கௌரவ உறுப்பினர் ஏ.எச்.அன்வர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த கூட்டத்தில் பயிர்செய்கை பற்றி கூறினீர்கள். அதற்கு இடம் இல்லை என்று சொன்னால் எனக்கு சொந்தமான 04 ஏக்கர் காணியை நான் 03 வருட குத்தகைக்கு சபைக்கு தந்துதவுகின்றேன். அடுத்ததாக IOC நிரப்பு நிலையம் அமைப்பதற்கு நாங்கள் தொடர்பு கொண்டோம் அவர்கள் இன்று இடத்தை பார்ப்பதற்காக வருகின்றார்கள். அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் IOC வளத்தாப்பிட்டியில் வரும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப்லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகை முடித்த பின்னர் தாமதமாக சுற்றுவட்டத்தில் இருந்து சென்றேன். அவ்விடத்தில் ஒரு சம்பவத்தை பார்த்தேன். ஹிஜ்ரா சுற்றுவட்டம் பிரதானமான ஒரு இடம். பொதுப் போக்குவரத்திற்காக அம்பாரைக்கு செல்பவர்கள் நீர்த் தாங்கிக்கு பக்கத்தில் இருக்கின்ற பஸ் தரிப்பிடத்தில் நிற்கின்றார்கள். அதே நேரத்தில் கல்முனைக்கு செல்பவர்களுக்கு பஸ் தரிப்பிடம் அமைக்கப்படவில்லை. அது இல்லை காரணம். பஸ் வழக்கமாக சுற்றுவட்டத்தில் இருந்து வந்தவுடன் நிறுத்துவார்கள். நான் அவதானித்தேன் ஹதியாக்கு சென்று வருபவர்கள் அந்தக் கட்டுகளில் இருந்தார்கள். அவ்விடத்தில் புதிதாக ஒரு ஜுவலரி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஜுவலரி உரிமையாளர் RDA கல்லில் விளம்பரப் பலகையை வைத்துள்ளார். பூச்சாடியினை வைத்து கடையை அழகுபடுத்தி இருக்கின்றார். அவரது வாகனத்தை மட்டும் முன்னுக்கு வைத்து மற்றவர்களை தரிக்காத அளவுக்கு ஒரு உத்தியை கையாண்டிருக்கின்றார்.

அன்று வெள்ளிக்கிழமை கடையை அடைத்திருக்கின்ற நேரம் அவ்விடத்தில் பொதுமக்கள் பஸ்ஸிற்காக வெயில் காரணமாக ஒதுங்கி அவ்விடத்தில் நின்றார்கள். அவர்களை விரட்டுகின்றார். அவ்விடத்தில் வலயக் கல்வி பணிமனையில் கடமையாற்றுகின்ற இரு உத்தியோகத்தர்களும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் ஏதோ ஒன்று பேசிவிட்டு அவர்கள் அதற்கு அருகில் பழைய கடையறை ஒன்றில் வெயிலில் நிற்கின்றார்கள். மற்றவர்கள் Star Communication அருகில் நிற்கின்றார்கள். பொதுமக்களுக்கு இப்படி அவலமான ஒரு நிலை அவ்விடத்தில் உருவாகி இருக்கின்றது. நானும் அக்கரைப்பற்றுக்கு செல்வதற்கு அவ்விடத்தில்தான் நின்றேன். தற்போது எரிபொருள் இல்லாத காரணத்தினால் பிரதேச சபைக்கு நடந்துதான் எனது வீட்டில் இருந்து வந்தேன். அவ்விடத்தில் பஸ் 02 இடங்களில் நிறுத்தப்படுகின்றது. எனவே பொதுமக்களின் இந்த அவல நிலையை கருத்திற் கொண்டு கிழக்கு மாகாண போக்குவரத்து அமைப்பின் ஊடாக சபையின் மூலம் அவ்விடத்தில் பஸ் தரிப்பிடம் ஒன்றை உருவாக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களே, நான் தொடர்ந்து சொல்வது ஒரு விடயத்தை சுருக்கமாக சொல்ல வேண்டும் என்று, இந்த விடயம் 02 வருடத்திற்கு முதல் பேசப்பட்ட விடயம். மக்கள் நிற்கின்ற இடம் பஸ் தரிப்பிடத்திற்கு பொருத்தமான இடம் இல்லை. 02 பக்கமும் பஸ் தரிப்பிடம் ஒரே இடத்தில் இருக்க இயலாது. இதற்கு சபை தீர்மானம் எடுத்து RDA இற்கும் பொலீஸ் இற்கும் கூட்டுறவு காணியில் பொருத்தமான ஒரு இடத்தை சிபார்சு செய்யச் சொல்லி எழுதி இருக்கின்றோம். அவ்விடத்தில் எல்லா கட்டடங்களும் சட்டவிரோதமான கட்டடங்கள். ஆனால் ஒரு வியாபாரம் ஆரம்பித்திருக்கும் போது மக்கள் இருந்தால் அவருக்கும் ஒரு பாதிப்பு. ஆனால் அவர்கள் நிற்பது நிழலுக்காக.அது பொருத்தம் இல்லை. ஆபத்தான இடம். அந்த விடயத்தை மீண்டும் RDA இற்கு அறிவிப்போம். இத்துடன் சபை அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.M.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை